மதுரை

மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ் தோத்திரம்.



அன்பு அளிப்பு.



நா. கப. காசிவிஸ்வநாதன் செட்டியார்

உ

சிவ மயம்

முன்னுரை.

குமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த ஸ்ரீமீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை யாவரும் பாராயணஞ் செய்து பயன் பெறும் பொருட்டு பருவத்திற்கொரு பாடலாகத் தொகுத்து, செம்பொன்னூர் சிவநேசச் செல்வர் நா. சுப. காசிவிசுவநாதன் செட்டியார் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மைக்கு லட்சார்ச்சனை நடாத்திய நன்னாளில் (29–5–56) இந் நூல் வெளியிடப் பெற்று அன்பளிப்பாக விநியோகிக்கப் பெற்றது.

சிவமயம்.

திருப்பூவணம் மடாதிபதி
ஸ்ரீலஸ்ரீ. காசிகானந்த ஞானுச்சாரிய
சுவாமிகளியற்றிய வாழ்த்துரை

பாண்டி நாட்டில் செம்பொன் ஊரில் தந வைசியர் குலத்தில் நா. சுப. காசி விசுவநாதன் செட்டியார் என்பவர் தவத்தால் தோன்றி மதுரை மாநகரில் வியாபாரம் செய்து பொருள் ஈட்டிப் புத்திரப் பேறும் பெற்று, "தந்தை மகற் காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்னும் திருக்குறளின்படி அறிவுடை மகனைச் செய்தும் தர் மார்த்த காம மோக்ஷம் என்பவைகளுள் மோக்ஷம் அடைய மதுரை மீனாக்ஷி அம்மையை நாடோறும் தெரிசித்து வந்த மையால் நற்கருத்துடையராய். பிறர் செயற்கரிய தும் ஆலவாய் ஆண்ட அம்மையாருக்கு விருப்பு உடையதும் ஆகிய லக்ஷ

அர்ச்சனை, பஞ்சமுக அர்ச்சனை, 108 கணபதி அபிஷேக ஆராதனை இதர பரிவார தேவதைகள் அபிஷேக ஆராதனைகளை விதிப்படி வைகாசிமாதம் 16-ம் (29—5—56) தேதி ஆகிய நன்னாளில் செய்தும் ஏனையோர் தோத்தரித்து வழிபட்டுய்யும் பொருட்டு மீனாக்ஷி அம்மை பிள்ளைத்தமிழ் தோத்திரச் செய்யுள் சில பகுதிகளை புத்தக ரூபத்தில் அச்சிட்டு அன்பளிப்பாக வழங்கியும், செய்த செயற்கரிய செயல்களை நேரில் கண்டு மகிழ்ந்தனம். இவ்வாறே என்றும் இறைவி அருள் பெற்று இகலோக பரலோக வாழ்வை இடையூறு இன்றிப் பெற்று இன்புறும் ஆறு மீனாக்ஷி அம்மையின் இருபாத கமலங்களையும் இறைஞ்சுகின்றேன்.

சுந்தரர் போற்றுஞ் சுந்தரர் பதத்தைத் தோன்று
மீனாக்ஷியின் பதத்தை
எந்தயர் வணங்கும் விநாயக னடியை இன்புறு
மறுமுக னடியை
தந்திர மாக விளங்கிடும் நடன நாயகன்
தாமரைத் தாளை
வந்திடு மின்பம் வழங்குதற் காக வாழ்த்தியே
தலைமிசை வைப்பாம்.
விதிதவ றாது காசி விசுவநா தப்பேர் பூண்டு
குதிரையில் வந்த சொக்கர் குலவிய பதத்தைப் போற்றித்
திதிமிகு மீன அட்சி திருவடி களைவந் தித்துக்
கதிபெறக் கருணை செய்யக் கருத்துள் வைத்திடுவேன் அம்மா.

சிவபோக சாரம்.

ஆசையறுப் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தைநீ நினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

உ

சிவமயம்

திருச் சிற்றம்பலம்



சித்தி விநாயகர் துதி

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குக
சித்தி யானைதன் செய்ய பொற்பாதமே

பரஞ் சோதி முனிவர்



சுப்பிரமணியர் துதி.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

அருண கிரி நாதர்



சோமசுந்தரேசர் துதி.

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்.

பரஞ்சோதி முனிவர்

சமயாச்சாரியார் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா
னடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர்
பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத்
தாள் போற்றி.

உமாபதிசிவம்

உ

திருச் சிற்றம்பலம்

மதுரை

மீனாட்சி யம்மை பிள்ளைத் தமிழ்.

விநாயகக் கடவுள்.

கார்கொண்ட கவுண்மதக் கடைவெள்ள முங்கட்
கடைக்கடைக் கனலு மெல்லை
கடவாது தடவுக் குழைச்செவி முகந்தெறி
கடைக்கால் திரட்ட எங்கோன்

போர்கொண்ட வெண்டோட்பொலன்குவடுபொதியும்வெண்
பொடிதுடி யடித்து வைத்துப்
புழுதியாட் டயராவொ ரயிராவ ணத்துலவு
போர்க்களிற் றைத்து திப்பாம்

தார்கொண்ட மதிமுடி பொருத்தன் திருக்கண்மலர்
சாத்தக் கிளர்ந்து பொங்கித்
தவழுமிள வெயிலுமழ கிலவுமள வளவலாற்
றண்ணொன்று வெச்சென்று பொன்

வார்கொண் டணைந்தமுலை மலைவல்லி கர்ப்பூர
வல்லியபி ராம வல்லி
மாணிக்க வல்லிமர கதவல்லி யபிடேக
வல்லிசொற் றமிழ் தழைபவே.

திருமால்

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டு மோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளரொளி விமானத்து
வாலுளை மடங்கல் தாங்கும்
அணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி முடிவைத்தெம்
ஐயனொடு வீற்றி ருந்த
அங்கயற் கண்ணமுதை மங்கையர்க் கரசியையெம்
அம்மனையை யினிது காக்க
கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத்தோடுதேங்
கலுழிபாய்ந் தளறு செய்பக்
கழனிபடு நடவையிற் கமலத் தணங்கரசொர்
கையணை முகந்து செல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோ ளெருத்த லைப்பப்
பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே.

திரு மகள்

வெஞ்சூட்டு நெட்டுடல் விரிக்கும் படப்பாயன்
மீமிசைத் துஞ்சுநீல
மேகத்தி னகத்து விடுசுடர்ப் படலைமணி
மென்பர லுறுத்தநொந்து

பஞ்சூட்டு சிறடி பதைக்குமதன் வெங்கதிர்ப்
படுமிளவெ யிற்றுடைந்தும்
பைந்துழாய்க் காடுவிரி தண்ணிழ லொதுங்குமோர்
பசுங்கொடியை யஞ்சலிப்பாம்

மஞ்சூட்ட கட்டுநெடு வான்முகடு துருவுமொரு
மறையோதி மஞ்சலிக்க
மறிதிரைச் சிறைவிரியு மாயிரமு கக்கடவுண்
மந்தாகி னிப்பெயர்த்த

செஞ்சூட்டு வெள்ளோதி மங்குடியி ருக்கும்வளர்
செஞ்சடைக் கருமிடற்றுத்
தேவுக்கு முன்னின்ற தெய்வத்தை மும்முலைத்
திருவைப் புரக்க வென்றே.

கலைமகள்

வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை
விரும்புஞ் சுரும்பர்பாட
விலைநறவு கக்கும் பொலன்பொகுட் டலர்கமல
வீட்டுக் கொழித்தெடுத்துக்
தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பினைந்
திணையென வெடுத்தவிறைநூற்
றெள்ளமுது கூட்டுணுமொர் வெள்ளோதி மத்தினிரு
சீறடி முடிப்பம்வளர்பைங்

கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை யொழுகுதீங்
கிளவியுங் களிமயிற்குக்
கிளரிளஞ் சாயலு நவ்விக்கு நோக்கும்விரி
கிஞ்சுகச் சூட்டரசனைப்
பிள்ளைக்கு மடநடையு முடனாடு மகளிர்க்கொர்
பேதைமையு முதவிமுதிராப்
பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளுமொரு பாண்டிப்
பிராட்டியைக் காக்கவென்றே.

---

2. செங்கீரைப் பருவம்

நீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி
நெற்றியிற் றொட்டிட்டவெண்
ணீற்றினொடு புண்டரிக் கீற்றுக்கு மேற்றிடவொர்
நித்திலச் சுட்டிசாத்தித்

தாராட்டு சூழியக் கொண்டையு முடித்துத்
தலைப்பணி திருத்திமுத்தின்
தண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கோர்
தமனியக் கொப்புமிட்டுப்

பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப்
பாலமுத மூட்டி யொருநின்
பானறு குமுதங் கனிந்தூறு தேறல்தன்
பட்டாடை மடிநனைப்பச்

சீராட்டி வைத்தமுத் தாடும் பசுங்கிளி
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே.

——

3. தாலப் பருவம் 16

தென்னன் றமிழி னுடன்பிறந்த சிறுகா
லரும்பத் தியரும்புந்
தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ் செங்கட்
கயவாய்ப் புனிற்றெருமை
இன்னம் பசும்புற் கறிக்கல்லா விளங்கன்
றுள்ளி மடித்தலநின்
றீம்பா லருவி யுவட்டெறிய வெறியுந்
திரைத்தீம் புனற்பொய்கைப்
பொன்னங் கமலப் பசுந்தோட்டுப் பொற்று
தாடிக் கற்றைநிலாப்
பொழியுந் தரங்கம் பொறையுயிர்த்த பொன்போற்
றொடுதோ லடிப்பொலன்சூட்
டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக் கரசே
தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண் ணமுதே
தாலோ தாலேலோ.

விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பரநாத
வெளியிற் றுவாதசாந்த
வீடுங் கடம்புபொதி காடுந் தடம்பணை
விரிந்த தமிழ் நாடுநெற்றிக்
கண்ணளிக் குஞ்சுந்த ரக்கடவுள் பொலியுமறு
காற்பீட மும்மெம்பிரான்
காமர்பரியங்கக் கவின்றங்கு பள்ளியங்
கட்டிலுந் தொட்டிலாகப்
பண்ணளிக்குங் குதலையமுதொழுகு குமுதப்
பசுந்தேற லூற லாடும்
பைங்குழவி பெருவிரல் சுவைத்து நீ பருகிடப்
பைந்தேற லூறுவண்கைத்
தண்ணளிக் கமலஞ் சிவப்பூற வம்மையொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே.

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே யுயிராலை
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தருள்பழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொன்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாந்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந்தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே.

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி
யிவள்பெரும் புகழ்நெடுநிலா
எங்கணு நிறைந்திடவ தங்கதனின் வெள்ளநீ
யெள்ளள வொண்டுகொண்டு
வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்தகருணை
வெள்ளந் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி
விளைப்பதும் பெற்றனை கொலாம்
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தும்மை
வைத்திடுஞ் சத்தியேகாண்
மற்றொரு சுதந்தர நினக்கென விலைக்கலை
மதிக்கடவுள் நீயுமுணர்வாய்
அண்ணலங் களியானை யரசர்கோ மகளுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமு
மொண்டர ளத்திரளும்
ஒழுகொளி பொங்க விழைத்திடு மம்மனை
யொருமூன்ற டைவி லெடாக்
கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற்செலநின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங்குயிலும்
பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற்
பெருகிய காதலைமேற்
பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு
பெடையோட ரசவனம்
அள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமக
ளாடுக வம்மனையே
அழகு தழைந்த கல்யாண சவுந்தரி
யாடுக வம்மனையே.

பன்னாறு கிளிமொழிப் பாவை நின் றிருமேனி
பாசொளி விரிப்பவந் தன்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
பருமுத்த மரகதமதாய்த்
தண்ணாறு மல்லற் றுறைச் சிறையனங்களி
தழைக்குங் கலா மஞ்ஞையாய்ச்
சகலமு நின்றிருச் சொருபமென் றோவிடுஞ்
சதுர்மறைப் பொருள் வெளியிடக்
கண்ணாறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரியுங்
கர்ப்பூரமு மொக்கக் கரைத்தோடி வாணியுங்
காளிந்தி யுங்கங்கையாம்
விண்ணாறு மளவலாய் விளையாடு புதுவைகை
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடியவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே

கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக்
கலந்தாடு பொன்னூசலக்
கடவுதிரு நோக்கத்து நெக்குருகி யிடநின்
கடைக்கணோக் கத்துமற்றச்
செங்கண்விடை யவர்மனமு மொக்கக் கரைந்துருகு
செய்கையவர் சித்தமேபொற்
றிருவூச லாவிருந் தாடுகின் றாயெனுஞ்
செய்தியை யெடுத்துரைப்ப
அங்கணொடு நிலம்விடர் படக்கிழித் தோடுவே
ரடியிற் பழுத்தபலவின்
அளிபொற் சுளைக்குடக் கனியுடைந் தூற்றுதே
னருவிபில மேழுமுட் டிப்
பொங்கிவரு பொழின்மதுர மதுரைநா யகிதிருப்
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே

வாழ்த்து.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

கச்சியப்ப சிவாச்சாரியார்.

அன்பு கருணையானந்தா பாராட்டுரை.

சிவவழி பாட்டுச் செம்பொன்னூர்ச் செல்வர்
தவவான் காசித் தனதமிழ் வணிகனுர்
தோத்திரம் செய்திடத் தொகுத்துத் தந்த
மீனுட்சி யம்மையின் மேலாந் திருவருள்
தோத்திரப் பாவின் தூய தமிழினைக்
கண்டேன் மகிழ்ச்சியும் கொண்டேன் மனதில்
தொண்டர்தம் மகிமை துலங்கிட உடனே
வாழ்த்துகின் றேனே வாழிய உலகே.

சுபம்.

ராஜா பிரஸ், மதுரை—56.